**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை**

**முன்னிலை - திரு. S.முகமது யூசுப் நவாஸ், B.A.,B.L.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை**

**2025ம் ஆண்டு ஜீன் 17ம் நாள் செவ்வாய்கிழமை**

**இடைக்கால மனு எண். 3/2025**
**இன்**
**அசல் வழக்கு எண். 89/2019**

தனிக்கொடி (எ) அரிகிருஷ்ணன் ...... மனுதாரர்/வாதி

**/ எதிர் /**

1. பழனி

2.திருமூலன் (எ) கண்ணன் ..... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பு 11.06.2025 இன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஜெயராமன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ராஜசேகரன் அவர்கள் ஆஜராகியும், எதிருரை தாக்கல் இல்லை என மேலொப்பம் செய்யப்பட்டுள்ளநிலையில், மனுதாரர் தரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

**1.** மனுதாரர் தரப்பில் கட்டளை 16 ரூல் 1 மற்றும் பிரிவு 151 உரிமையியல் விசாரணை சட்டத்தின் படி இவ்வழக்கில் மழவராயனேந்தல் குரூப் கிராம நிர்வாக அலுவலருக்கு சாட்சி சம்மன் அனுப்பி மனுவில் கண்ட ஆவணங்களை தரவழைத்து, தனது தரப்பு சாட்சியம் மூன்றாக சாட்சியம் அளித்திட அனுமதி வேண்டி அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**2. மனுவின் சுருக்கம்:**

தாவா வழக்கில் மனுதாரர் தரப்பு சாட்சிய விசாரணை நடைபெற்று வா.சா.1 மற்றும் வா.சா.2 விசாரிக்கப்பட்டுள்ளநிலையில், பிராது சொத்து விபரம் சம்பந்தமாக மானாமதுரை வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள நத்தம் நிலவரி திட்ட துாயஅடங்கல் பதிவேடு மற்றும் நத்தம் நிலவரி திட்ட துாய சிட்டா ஆகியவற்றுடனும் சம்பராயனேந்தல் கிராம கணக்கில்

உள்ள நத்தம்'அ' பதிவேடு மற்றும் நத்தம் புலவரைபடம் ஆகியவற்றுடனும் தாவா சொத்திற்கான நான்குமால் சான்றோடும் மானாமதுரை வட்டம், மழவராயனேந்தல் குரூப் கிராம நிர்வாக அலுவலர் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி வா.சா.3 ஆக சாட்சியம் அளித்து மேற்கண்ட ஆவணங்களில் வட்டாட்சியர் கையொப்பமிட்ட சான்றிட்ட நகல்களுடன் அசல் ஆவணங்களையும், நீதிமன்றத்திற்கு கொண்டுவந்து ஒப்பீடு செய்து குறியீடு செய்து கொள்ள ஏதுவாக மழவராயனேந்தல் குரூப் கிராம நிர்வாக அலுவலருக்கு சாட்சி சம்மன் அனுப்ப உத்தரவிட வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4. இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை : இம்மனு அனுமதிக்கத்தக்கதா / இல்லையா என்பதேயாகும் :-**

மனுதாரார் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்கத்தகுந்த நிலையில் உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே நீதியின் நலன் கருதி இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்படுகிறது.

> "Audi alteram partem is a Latin phrase meaning 'listen to the other side', or "let the other side be heard as well". It is the principle that no person should be judged without a fair hearing in which each party is given the opportunity to respond to the evidence against them."

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் தாவா மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ஜீன் 17ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.06.17 10:51:48 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மானாமதுரை.

மனுதாரர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.06.17 10:52:10 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மானாமதுரை

**DISTRICT MUNSIF COURT**
**MANAMADURAI**

## ORDER

**I.A.No.3/2025**
**in**
**OS. No.89/2019**

**Dated: 17.06.2025**